**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 22/2016**

**Deposition of Witnesses for PW5**

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு.சிதம்பரம் | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.07.2025.

**1வது எதிரி பிடி வாரண்டில் ஆஜர்படுத்தினார்கள். 3,4 எதிரிகள் ஆஜர். 2,5 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம் திருவாடனை தாலுகாவில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று சிறுகம்பையூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் மருங்கூர் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது 16.10.2015 அன்று போதை பொருள் நுண்ணறிவு பிரிவினர் காவல் ஆய்வாளர் தொலைபேசி வாயிலாக எனக்கு தொடர்பு கஞ்சா சம்பந்தமாக சாட்சியாக இருக்க அழைத்தார். நான் எனது மேலதிகாரிக்கு தகவல் தெரிவித்து நான், கிராம உதவியாளர் காளீஸ்வரன் என்பவருடன் மருங்கூரிலிருந்து எஸ்.பி.பட்டிணம் செல்லும் வழியில் உள்ள கலந்தர் என்பவருடைய தோப்பிற்கு மாலை 07.30 மணிக்கு சென்றோம். அப்போது அங்கு காவல் ஆய்வாளர் அங்கிருந்த கஞ்சாவை என்னிடம் காட்டி, கையொப்பம் பெற்றார். காவல் ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து 3 செல்போன்கள், பணம் ரூ.6300/- , 3 மூட்டை கஞ்சா கைப்பற்றினார். அதில் சாட்சிகளாக நானும், கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.3ல் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் சோதனை சம்மத கடிதம் அ.த.சா.ஆ.2ல் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது

சோதனை சம்மத கடிதமாகும். என்னை காவல் துணை கண்காணிப்பாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

முதல் விசாரணையில் இரவு 7.30 மணிக்கு களந்தர் என்பவரின் தென்னதோப்பிற்கு சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அங்கு சென்றபோது காவல் துறையினரும், அந்த ஊர்க்காரர்களும் இருந்தார்கள். ஊர்காரர்களிடம் காவல் துறையினர் கையெழுத்து வாங்கினார்களா என்றால் எனக்கு தெரியாது. என்னை காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தபோது களந்தர் என்பவரின் தென்னதோப்பிற்கு இரவு 7.30 மணிக்கு சென்றதாக சொல்லவில்லை என்றால் அது பற்றி தற்போது ஞாபகம் இல்லை. அங்கு 7.30 மணி முதல் 8.30 மணி வரை இருந்தோம் என்றால சரிதான். அதன்பின்பு NIB-CID அலுவலகத்திற்கு இரவு 9.00 மணிக்கு சென்றோம். அங்கு காவல் நிலையத்தில் வைத்து என்னிடமும், கிராம உதவியாளரிடமும் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். மகஜர் அ.த.சா.ஆ.3ல் உள்ள கையொப்பமும், சோதனை சம்மத கடிதத்திலும் உள்ள கையெழுத்து காவல் நிலையத்தில் வைத்து போட்டோம் என்றால் சாட்சி களந்தர் தோப்பிலும் கையெழுத்து செய்தேன் என்றும், காவல் நிலையத்திலும் கையெழுத்து செய்தேன் என்றும் சொல்லுகிறார். காவல் நிலையத்தில் நான் செய்த கையெழுத்து செய்த ஆவணங்களை யார் எழுதினார்கள் என்றால் அது எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. நான் எத்தனை மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சென்றதாக எனது பணி டைரியில் குறிப்பு எழுதினேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சென்றது குறித்து எனது மேலதிகாரிக்கு அறிக்கை அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திற்கு செல்லவில்லை என்றும், செல்போன்கள் மற்றும் கஞ்சா மூட்டைகள், பணம் ரூ.6300/- கைப்பற்றவில்லை என்றும், நேரடியாக நானும், கிராம உதவியாளரும் போதை பொருள் நுண்ணறிவு பிரிவு அலுவலகத்திற்கு சென்று அங்கு வைத்து தயாரித்து வைத்திருந்த ஆவணங்களில் கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வருவாய் துறையில் நான் அரசு பணி செய்ததால் போலீசார் வேண்டுகோளிற்கிணங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:-</u>**

இல்லை

Taken down by me in open court
read over to the witness and
admitted by him to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.